| அனுப்புநர் | பெறுநர் |
|---|---|
| முனைவர் சி.உஷாராணி, M.Sc.,B.Ed., P.hd,<br>அரசுத் தேர்வுகள் இயக்கக இயக்குநர்<br>அரசுத் தேர்வுகள் இயக்ககம்,<br>சென்னை–6 | அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்/<br>இணை இயக்குநர் (கல்வி),<br>பாண்டிச்சேரி. |

**ந.க.எண்.124817/பி2/2019** **நாள் : 11 .03.2020**

**ஐயா/அம்மையீர்,**

**பொருள் :** அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை–6– இடைநிலைக் கல்வி விடுப்பு சான்றிதழ் பொதுத்தேர்வு மார்ச் 2020 முகப்புத்தாட்கள் – விடுபட்ட / பார்கோடு இல்லாத / சேதமடைந்த முகப்புத்தாட்கள் – பதிவிறக்கம் செய்தல் – சார்பு

******

மார்ச் 2020, இடைநிலைக் கல்வி விடுப்பு சான்றிதழ் பொதுத்தேர்விற்கான முகப்புத் தாட்கள் அனைத்து தேர்வுமைய தலைமையாசிரியர்களிடம் ஒப்படைக்கப்பட்டு முகப்புத்தாட்களை முதன்மை விடைத்தாட்களுடன் இணைத்து தைக்கும் பணியினை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டது. தேர்வு மையத் தலைமை ஆசிரியர்கள் தங்கள் மையத்தில் தேர்வெழுதும் அனைத்துத் தேர்வர்களுக்கும் தேர்வெழுதும் அனைத்து பாடங்களுக்கான முகப்புத் தாட்கள் பெறப்பட்டுள்ளனவா என்பதையும் உறுதி செய்து கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டது.

தேர்வு மையத் தலைமை ஆசிரியர்கள், இடைநிலைத் தேர்வுக்கான முகப்புத்தாட்கள் கிடைக்கப் பெறாத / சேதமடைந்த (Barcode - Reg.No. overlapped, bar code smudged) முகப்புத்தாட்களை தேர்வு மையத்திற்கான User ID & Password கொண்டு இணையதளம் மூலம் **17.03.2020** முதல் **26.03.2020** வரை அந்தந்த தேர்வு மையத்திலேயே பதிவிறக்கம் செய்து கொள்ளுமாறு சம்பந்தப்பட்ட தலைமை ஆசிரியர்களுக்கு அறிவுறுத்துமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

முகப்புத்தாட்கள் பெறப்படவில்லை / சேதமடைந்திருந்தல் / பார்கோடு இல்லாதிருத்தல் (Barcode Missing / Bar Code Damage) ஆகிய காரணங்களுக்காக மட்டுமே முகப்புத்தாட்கள் பதிவிறக்கம் செய்திட வேண்டும்.. மாவட்டக் கல்வி அலுவலர்கள் இதில் தனிக்கவனம் செலுத்தி தேர்வு மையத் தலைமை ஆசிரியர்களை நேரிடையாக தொடர்பு கொண்டு மேற்படி விவரங்களை பெற அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும்.

ஓம்./-
இயக்குநர்

**நகல்**

அனைத்து அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர்கள்

– உரிய நடவடிக்கைக்காக